23.10.2025.

R.C.S.1/2024

ம.சா.2 சுந்தரேசன், த/பெ.சந்திரசேகரன்.

**வாக்குமூலம்.**

நான் புதுப்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது தகப்பனார் கிருஷ்ணமூர்த்தி, தசரதன், குணசேகரன், சிவலிங்கம், ராமமூர்த்தி ஆகியோர்கள்மீது புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும் நானும் எனது தகப்பனாரும் புதுபட்டி கிராமத்தில் இருக்கிறோம். 29.07.2023ம் தேதி மேற்படி 5 நபர்களும் ஊரில் உள்ள விநாயகர் கோவிலில் உள்ள கல்வெட்டினை உடைத்துவிட்டார்கள். அந்த கல்வெட்டின் மதிப்பு சுமார் 75 ஆயிராம் ரூபாய் இருக்கும். அந்த கல்வெட்டினை என் அப்பாதான் வைத்தார். பின்னர் எனது அப்பாவை தகாத வார்த்தைகளால் திட்டி கொலை செய்து விடுவதாக மிரட்டி அடித்துவிட்டார்கள். இது சம்மந்தமாக எனது தகப்பனார் தேசூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகாரின்பேரில் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் புகார் கொடுத்தார். அதற்கும் நடவடிக்கை எடுக்கவில்லை அதற்குதான் புகார் கொடுத்தார் அதனால் என் தகப்பனார் கொடுத்த புகாரின்பேரில் நடவடிக்கை எடுக்க கோருகிறேன். இந்த மனு தாக்கல் செய்த பிறகும் இதுநாள்வரை போலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.